7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

62. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2004 ஆம் ஆண்டு கட்டணம் மற்றும் அபராத ஒழுங்குமுறை விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து 12–2–2018 ஆம் நாளிட்ட த.மி.ஒ.ஆ/க&அ/4/2–9 ஆம் எண்ணில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

127. மானியக் கோரிக்கை எண் 3–நீதி நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2018–2019. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

128. மானியக் கோரிக்கை எண் 24–சிறைச்சாலைகள் (உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2018–2019. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

129. மானியக் கோரிக்கை எண் 33–சட்டத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2018–2019. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

130. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய மக்கள் சாசனம், 2018. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

131. நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2018–2019. (தமிழ்)

132. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2018–2019. (தமிழ்)